ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| வெளியிடுபவர் | நிதியியல் உளவறிதல் பிரிவு |
|---|---|
| திகதி | 2024 யூன் 18 |

# இலங்கை நிதியியல் உளவறிதல் பிரிவு, இலஞ்சம் அல்லது ஊழல் சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றினை மேற்கொண்டிருக்கின்றது

இலங்கை நிதியியல் உளவறிதல் பிரிவு, இலஞ்சம் அல்லது ஊழல் சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுடன் பணம் தூயதாக்குதல், இலஞ்சம் அல்லது ஊழல் மற்றும் ஏனைய தொடர்பான குற்றங்கள் பற்றிய புலனாய்வுகள் மற்றும் வழக்குத் தொடுப்புக்கள் தொடர்பான தகவல்களைப் பரிமாற்றிக்கொள்வதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றினை மேற்கொண்டிருக்கின்றது.

சனாதிபதி சட்டத்தரணியும் இலஞ்சம் அல்லது ஊழல் சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் ஆணையாளருமான திரு. சேத்திய குணசேகரவும் இலஞ்சம் அல்லது ஊழல் சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமான திரு. கனிஸ்கா விஜயரெட்ணவும் இலஞ்சம் அல்லது ஊழல் சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் சார்பிலும் நிதியியல் உளவறிதல் பிரிவின் பணிப்பாளர் முனைவர் சுபாணி கீர்த்திரட்ண நிதியியல் உளவறிதல் பிரிவின் சார்பிலும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர். மத்திய வங்கியின் ஆளுநர் முனைவர் பீ. நந்தலால் வீரசிங்க, பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தேசிய இணைப்புக் குழுவின் தலைவர் என்ற ரீதியில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமிடுவதற்கு தலைமை தாங்கினார். இலங்கை மத்திய வங்கியின் துணை ஆளுநரும் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் ஒழித்தல் செயலணிக் குழுவின் உறுப்பினருமான திருமதி. கே. எம். ஏ. என். டவுலகலவும் இந்நிகழ்வில் கலந்துகொண்டார்.

2023ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க ஊழலுக்கெதிரான புதிய சட்டம், உள்நாட்டில் சட்டத்தினை நடைமுறைப்படுத்தும் ஏதேனும் அதிகாரசபையுடன் அல்லது வேறு ஏதேனும் அரசாங்க அதிகாரசபையுடன் ஏதேனும் புலனாய்வுகள் தொடர்பான தகவல்களை பரிமாற்றிக்கொள்வதற்கு, இலஞ்சம் மற்றும் ஊழல் சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்கு அதிகாரங்களை வழங்கியுள்ளது. 2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் நியதிகளில், நிதியியல் உளவறிதல் பிரிவு தகவல்களை பரிமாறிக்கொள்வதற்காக எந்தவொரு உள்நாட்டு அரச நிறுவனத்துடனும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொள்ளமுடியும். இலஞ்சம் அல்லது ஊழல் சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்கும் நிதியியல் உளவறிதல் பிரிவிற்குமிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தமானது இரண்டு நிறுவனங்களும் தகவல்களை பரிமாறிக்கொள்வதனை இயலுமைப்படுத்துவதுடன் இது, பணம் தூயதாக்கல், இலஞ்சம் அல்லது ஊழல் மற்றும் இது தொடர்பான குற்றங்களை தடுப்பதற்கும், கண்டறிவதற்கும் வழக்குத்தொடுப்பதற்கும் இன்றியமையாததாகும்.

நாட்டின் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் கட்டமைப்பினை வலுப்படுத்தும் பொருட்டு, தகவல்களை பரிமாறிக்கொள்வதற்காக 2008 இலிருந்து நிதியியல் உளவறிதல் பிரிவு, வெளிநாட்டு இணைத்தரப்பினர்களுடன் 44 புரிந்துணர்வு ஒப்பந்தங்களையும் அதேபோன்று 13 புரிந்துணர்வு ஒப்பந்தங்களை இலங்கைச் சுங்கம், குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம், உண்ணாட்டரசிறைத் திணைக்களம், ஆட்பதிவுத் திணைக்களம், இலங்கைப் பொலிஸ், இலங்கை மதுவரித் திணைக்களம் உட்பட உள்நாட்டு அரச முகவர்களுடனும் செய்திருக்கிறது.



இலஞ்சம் அல்லது ஊழல் சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர்நாயகம் திரு. கனிஸ்கா விஜயரெட்ணவும் நிதியியல் உளவறிதல் பிரிவின் பணிப்பாளர் முனைவர் சுபாணி கீர்த்திரட்ணவும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் தேசிய இணைப்புக் குழுவின் தலைவருமான முனைவர் பி. நந்தலால் வீரசிங்க மற்றும் சனாதிபதி சட்டத்தரணியும் இலஞ்சம் மற்றும் ஊழல் சார்த்துதல்களை விசாரிப்பதற்கான ஆணைக்குழுவின் ஆணையாளருமான திரு. சேத்திய குணசேகர ஆகியோர் முன்னிலையில் பரிமாற்றிக்கொள்கின்றனர்.